# 70 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையினது

# பெறுமதிகள் மற்றும் மனப்பான்மைகள் தொடர்பான ஆய்வு

நிறைவேற்று சாராம்சம்




**பெப்ரவரி 2019**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

**உள்ளடக்கம்** **பக்கம்**


**அறிமுகம்** ........ 2

**முறைமையியல்** ........ 4

**நிறைவேற்று சாராம்சம்** ........ 5


© 2019 Social Indicator

# அறிமுகம்

70 வருடகால சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் ஆட்சி முறை, ஜனநாயகம், அரசியல் கருத்தியல், சர்வதேச உறவுகள், சமாதானம் மற்றும் நல்லிணக்கம் குறித்து பொதுமக்களின் கருத்தை அறிய முயல்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். குறிப்பாக, இளைஞர்களின் தெரிவிற்கும் இளைஞர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதித்துவத்துக்கும் இடையிலான ஜனநாயக நம்பிக்கை இடைவெளி குறித்து அறிவதுடன், தனது 100வது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது, அரசாங்கமும் ஆட்சியும் 21ஆம் நூற்றான்டில் பிறந்தவர்களின் கையில் இருக்கும் போது, இலங்கை எவ்வாறானதாக காணப்படும் என்பதை அறிவதும் இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

1948 முதல், ஆசியாவின் பழமை வாய்ந்த ஜனநாயக நாடாகக் கருதப்படும் இலங்கை, தேசத்தை கட்டியெழுப்புதல் நோக்கிய பயணத்தில் தனது சொந்த பாதையை வடிவமைத்துள்ளது. இதன் போது இலங்கை பல சாதனைகளை புரிந்துள்ளதுடன் பல சோதனைகளையும் சந்தித்துள்ளது. ஒரு பக்கம், இந்த முயற்சியின் போது இலங்கை ஏனைய தென்னாசியா நாடுகளுடன் ஒப்பீட்டளவில் உயர்ந்த சமூகச்சுட்டிகளைப் பேணியுள்ள அதேவேளை, மறுபக்கம் உள்நாட்டு அமைதியின்மையாலும் (தென்பகுதி மார்க்சிஸ்ட் எழுச்சி) கிட்டத்தட்ட மூன்று தசாப்தகால இனமோதலினாலும் (இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான மோதல்) பாதிக்கப்பட்டது. இலங்கையின் இனமோதல் 2009 மே மாதம் முடிவிற்கு வந்த போதிலும், நாடு நீண்டகால துயரங்கள் மற்றும் அழிவுகளிற்கான காரணங்களுக்கு நிரந்தர தீர்வு காண்பதில் இன்னும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இலங்கை தனது 70 வருட சுதந்திரத்தைக் கொண்டாடுகின்ற போதிலும், சமூகங்கள் மத்தியில் சிறிய அளவிலான வன்முறைகள் காணப்படுகின்றமையானது இனரீதியான அரசியலால் தொடர்ந்தும் ஈர்க்கப்படுகிற சான்றுடைய நாடாகவும் காணப்படுகிறது. பரந்துபட்ட மக்கள் பங்களிப்புடன் கூடிய தொடர்ச்சியான தேர்தல்களுடனான தடையற்ற ஜனநாயக வரலாற்றை கொண்டுள்ளபோதிலும் ஏதேச்சதிகார போக்கை கொண்ட தலைவர்களிற்கான விருப்பம் குறைவடைந்ததாகத் தென்படவில்லை. இலங்கையின் அரசியல்யாப்பு மறுசீரமைப்புக்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை தோல்வியில் முடிவடைந்தன.

உலக மயமாக்கல், வளர்ந்து வரும் பிராந்திய மற்றும் சர்வதேச வல்லரசுகள் மற்றும் ஏனைய பல அரசியல் பொருளாதார யதார்த்தங்கள் காரணமாக இலங்கை சமூகம் துரித மாற்றத்தைச் சந்தித்து வருகின்றது. தற்போதைய அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கைகளும் அவர்களது நடவடிக்கைகளும் சமகால இலங்கை எதிர்கொள்கின்ற சவால்களிற்கு தீர்வைக் காண்பதற்கு ஏற்றதாக காணப்படவில்லை.

© 2019 Social Indicator

இவ்வாறான சூழ்நிலையில் இந்த ஆய்வானது முக்கிய விவகாரங்களான ஜனநாயகம் மற்றும் ஆட்சி முறை தொடர்பில் இலங்கை மக்களின் கருத்தையும் நிலைப்பாட்டையும் அறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில், பல்வேறு தரப்பினர் மத்தியில் காணப்படுகின்ற வேறுபட்ட பரிமானங்களை கொள்கை வகுப்பாளர்கள் அறிந்துகொள்ளச் செய்து, இலங்கையில் இடம்பெறும் அரசியல் விவாதத்தை மேம்படுத்தி, இதன் மூலம் அதிகாரத்தில் உள்ளவர்கள் பொருத்தமான கொள்கை சீர்திருத்தங்களுக்காக முன்னின்று செயற்பட உதவமுடியும்.

அத்தோடு, இலங்கை புதிய அரசியலமைப்பை உருவாக்குவது குறித்து சிந்தித்து வரும் இந்த வேளையில் மக்களின் எண்ணங்கள் குறித்த ஒரு தோற்றத்தை இந்த ஆய்வு முன்வைக்கின்றது. இதில் பல்வேறுபட்ட விதங்களில் தொடர்புபட்டவர்களின் வேறுபட்ட விளக்கங்களை வரவேற்பதற்காக இந்த ஆய்வின் கண்டறிதல்கள் விபரண முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மாதங்களில் நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் விளக்கங்களுடன் சோஷல் இன்டிகேட்டர் முழுமையான அறிக்கையை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்கணிப்பு பிரிவான சோஷல் இன்டிகேட்டர் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது. குறிப்பிட்ட விவகாரம் தொடர்பாக மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான ஊடகத்தை வழங்குவதற்காக 1999ஆம் ஆண்டு முதல் சோஷல் இன்டிகேட்டர் அமைப்பு பரந்துபட்ட சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் மக்கள் கருத்துக்கணிப்புக்களை முன்னெடுத்துவருகின்றது.

கலாநிதி பிரதீப் பீரிஸ், எம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சகினா மொயினுடீன் ஆகியோர் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் ஆவர். ஹசினி லேகம்வசம் ஆய்வு உதவிகளையும், ஷசிக் தனுஷ்க தரவு பகுப்பாய்வுகளில் உதவிகளையும் வழங்கியுள்ளனர்.

இந்த ஆய்வின்போது மிகவும் பெறுமதியான கருத்துக்களையும் வழிகாட்டுதல்களையும் முன்வைத்து உதவிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கும் இந்த ஆய்விற்கு அவசியமான நிதியுதவியை வழங்கிய நோர்வே வெளிவிவகார அமைச்சிற்கும் சோஷல் இன்டிகேட்டர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

- ஆய்வின் கண்டறிதல்களின் விபரண முறையிலான முழுமையான அறிக்கையின் ஆங்கில வடிவத்தை இங்கு பெறலாம்.

© 2019 Social Indicator

## முறைமையியல்

இந்த ஆய்வானது, இலங்கையின் அனைத்து (25) மாவட்டங்களிலும் 2,300 பதிலுரைப்பாளர்களுடன் அரைக் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தினை உபயோகித்து சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலத்தில் நேருக்கு நேரான நேர்காணல்கள் ஊடாக நடாத்தப்பட்டது. மாதிரியின் அளவானது 2% வழுவுக்கு உட்பட்டதாக 95% நம்பிக்கை மட்டத்தில் பெறுபேறுகளை உருவாக்கும் முகமாகவும் மற்றும் உத்தேசிக்கப்பட்ட பகுப்பாய்வுக்கு அவசியமான வேறுபாடுகளுக்கு இடமளிக்கும் வகையிலுமாகத் தீர்மானிக்கப்பட்டது. 2018ம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் திகதி முதல் ஒக்டோபர் 10ஆம் திகதி வரை களத்தில் தரவு சேகரிப்பு நடத்தப்பட்டது. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூன்று இனங்களையும் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் உள்ளடங்கிய 60 வெளிக்கள உத்தியோகத்தர்கள் இந்த ஆய்வில் பங்கேற்றனர். சேகரிக்கப்படும் தரவுகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக, உடன் விஜயங்கள், தரவு சேகரிக்கையில் மற்றும் தரவு சேகரிக்கப்பட்டதன் பின்னரான சோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இறுதித் தரவுத்தொகுப்பானது சனத்தொகையின் மாவட்ட, இன மற்றும் வயது விகிதாசாரத்தைப் பிரதிபலிக்குமாறு நிறையேற்றப்பட்டது. பகுப்பாய்வுக்கு சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரப் பொதி (SPSS) பயன்படுத்தப்பட்டது.

© 2019 Social Indicator 

## நிறைவேற்று சாராம்சம்

- இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் (77.5%) ஊழல் தீமையான விடயம், அது உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும் என கருதுகின்றனர்.

- அபிவிருத்தியை பொறுத்தவரையில் அரசாங்கம் கல்வித் துறை, விவசாயத் துறை மற்றும் சுகாதாரச் சேவைகளிற்கு வரவு-செலவு திட்டத்தில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என இலங்கையர்கள் கருதுகின்றனர்.

- தனிநபர்களை எதிர்காலத்தில் சிறந்த வேலைவாய்ப்புக்களை பெறக்கூடியவர்களாக மாற்றுவதற்கு பாடசாலை பாடத்திட்டத்தில் ஆங்கில மொழிக்கு பரந்துபட்ட கவனத்தை வழங்கவேண்டும் என குறிப்பிடத்தக்க அளவு இலங்கையர்கள் (83.2%) கருதுகின்றனர்.

- இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமுல்படுத்தப்படும் விதம் குறித்து பெரும்பான்மையான இலங்கையர்கள் (59.2%) அதிருப்தியடைந்துள்ளனர். இன அடிப்படையில் பார்த்தால் சிங்கள பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவு (64.3%) அதிருப்தியடைந்துள்ளனர்.

- பெரும்பான்மையான இலங்கையர்கள் (70.9%) இலங்கையில் மரணதண்டனையை நடைமுறைபடுத்த வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

- பெரும்பான்மையான இலங்கையர்கள் (50.8%) பேஸ்புக், டுவிட்டர், யூடியுப், வைபர் மற்றும் வட்ஸ் அப் போன்ற சமூக ஊடகங்களை தாங்கள் ஒருபோதும் பயன்படுத்தியதில்லை என குறிப்பிட்டுள்ளனர். சமூக ஊடகங்களை பயன்படுத்துபவர்களில் இளைஞர் அல்லாதவர்களை (13.3%) விட இளைஞர்களே (57.7%) அதிகமாக பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

- இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து பெரும்பான்மையான இலங்கையர்கள் (53.3%) அதிருப்தியை தெரிவித்துள்ளனர். இந்தக் கருத்தை அநேகமான இளைஞர்கள் (60.0%) கொண்டுள்ளனர்.

- கடந்தகால அமைதியின்மையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதிவழங்குதல் என்ற நோக்கில் கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தின் போது அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் தொடர்பிலான உண்மையை கண்டறிவது முக்கியமானது என

© 2019 Social Indicator 

பெரும்பான்மையான இலங்கையர்கள் (72.4%) கருதுகின்றனர். இன அடிப்படையில் பார்த்தால் சிங்கள பெரும்பான்மையினரை விடவும் சிறுபான்மை சமூகத்தினரே இந்தக் கருத்தைக் கொண்டுள்ளனர்.

❖ ஆட்சிமுறையை பொறுத்தவரையில் மற்றைய ஆட்சிமுறைகளை விடவும் ஜனநாயகமே சிறந்தது என பெரும்பான்மையான இலங்கையர்கள் (74.0%) கருதுகின்றனர்.

❖ சுகாதார சேவைகளில் தனியார் துறையின் ஈடுபாட்டை பெரும்பான்மையான இலங்கையர்கள் நிராகரிக்கின்றனர். முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் (61.3%) இந்தக் கருத்தை கொண்டுள்ளனர். கல்வித் துறையில் தனியார் துறையினரின் ஈடுபாடு குறித்தும் இதேபோன்ற கருத்து காணப்படுகின்றது.

❖ அரசாங்க செலவீனத்தில் தாக்கத்தைச் செலுத்துகின்ற போதிலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் குறைக்கக்கூடாது என பெரும்பான்மையான இலங்கையர்கள் (50.2%). கருதுகின்றனர். குறிப்பாக இளைஞர் அல்லதவர்களை (49.6%) விடவும் இளைஞர்களே (51.3%) இந்த எண்ணத்தினை அதிகமாகக் கொண்டுள்ளனர்.

❖ இலங்கையின் அரசியல்யாப்பில் மதத்திற்கு முன்னுரிமை அளிப்பது குறித்த விடயத்தில் பெரும்பான்மை மதத்திற்கு முன்னுரிமை அளிப்பது சரியென பெரும்பான்மையான மக்கள் கருதுகின்றனர். இதேவேளை, ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள சமத்துவத்திற்கான உரிமையை உறுதி செய்வதற்காக எந்த மதத்திற்கும் அரசியல்யாப்பில் முன்னுரிமை வழங்கக்கூடாது என 36.5% மக்கள் கருதுகின்றனர். குறிப்பாக சிங்கள சமூகத்தவர்களே அதிகளவில் அரசியல்யாப்பில் மதத்திற்கு முன்னுரிமை அளிப்பது சரியென்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர். அதேவேளை, சிறுபான்மை சமூகத்தவர்கள், ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள சமத்துவத்திற்கான உரிமையை உறுதி செய்வதற்காக எந்த மதத்திற்கும் அரசியல்யாப்பில் முன்னுரிமை வழங்கக்கூடாது என குறிப்பிடுகின்றனர்.

❖ குறிப்பாக ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள சமத்துவத்திற்கான உரிமையை உறுதி செய்வதற்காக எந்த மதத்திற்கும் அரசியல்யாப்பில் முன்னுரிமை வழங்கக்கூடாது என அதிகமாக இளைஞர்களே (36.5%) தெரிவித்துள்ளனர்.

❖ ஆட்சி முறைகளுக்கான ஆதரவு என்ற விடயத்தில் பெரும்பான்மையானவர்கள் (84.2%) ஜனநாயக ஆட்சி முறையே சிறந்தது என தெரிவித்தனர். இதேவேளை, பாராளுமன்றம் மற்றும் தேர்தல்களின் அழுத்தங்களுக்கு உட்படாது தீர்மானம் எடுக்கக்கூடிய வலிமையான ஒரு

தலைவர் இருப்பதையும், பாராளுமன்றம் மற்றும் தேர்தல்களின் அழுத்தங்களுக்கு உட்படாது நாட்டிற்கு எது மிகச் சிறந்தது என தான் நம்பும் தீர்மானத்தை எடுக்கும் ஒரு நிபுணர் இருப்பதையும் பெருமான்மையானவர்கள் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தனர்.

❖ இலங்கை தனது முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க நாடுகளாக ஜப்பானையும் (24.7%) சிங்கப்பூரையும் (19.5%) பலர் சுட்டிக்காட்டினர். மலையக மற்றும் தமிழ் சமூகத்தினர் பெருமளவிற்கு இந்தியாவைக் குறிப்பிட்டனர். முஸ்லிம் சமூகத்தினர் சவூதி அரேபியாவைத் தெரிவு செய்துள்ளனர். மேற்குலக நாடுகளிற்கான ஆதரவு மிகவும் குறைவாகவே காணப்பட்டுள்ளது. எனினும், பெருமளவிலான இலங்கையர்கள் (52.5%) அமெரிக்காவே உலகில் சக்திவாய்ந்த நாடு எனத் தெரிவித்துள்ளனர். மேலும், இலங்கையைத் தவிர தாங்கள் வாழ விரும்பும் நாடு என அவுஸ்திரேலியாவைத் தெரிவித்துள்ளனர்.

The Centre for Policy Alternatives (CPA) is an independent, non-partisan organisation that focuses primarily on issues of governance and conflict resolution. Formed in 1996 in the firm belief that the vital contribution of civil society to the public policy debate is in need of strengthening, CPA is committed to programmes of research and advocacy through which public policy is critiqued, alternatives identified and disseminated.

Address: 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka.
Telephone: +94(11)2081384-6
Fax: +94(11)2081388
Web: www.cpalanka.org
Email: info@cpalanka.org

Social Indicator (SI) is the survey research unit of the Centre for Policy Alternatives (CPA) and was established in September 1999, filling a longstanding vacuum for a permanent, professional and independent polling facility in Sri Lanka on social and political issues. Driven by the strong belief that polling is an instrument that empowers democracy, SI has been conducting polls on a large range of socio-economic and political issues since its inception.

Address: 105, 1/1, Fifth Lane, Colombo 03
Telephone: +94(11)2370472/4
Web: http://cpalanka.org/survey-research/